★ யாழ் செயலகத்தில் புனர்வாழ்வுப் பிரிவுக்கு

# இராணுவ நடவடிக்கையால் இறந்தவர்களுக்கு நட்டஈடு வழங்க ஒரு கோடி ரூபா கிடைத்துள்ளது

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மரணமடைந்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக யாழ் செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவிற்கு ஒரு கோடி ரூபா கிடைத்துள்ளது. 1983-ம் ஆண்டிலிருந்து கடந்த வருடம் ஆனிமாதம் 15-ம் திகதி வரை இவ்வாறு பாதிப்புற்றவர்களின் குடும்பங்களுக்கு இந் நிதியை வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் துரிதமாக எடுக்கப்பட்டுமுடிவுறும் தறுவாயில் இருப்பதாக செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ் செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற நாலாயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்களில் 1800 க்கும் அகமானோருக்கு ஏற்கெனவே நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த வரிசையில் ஏனையோருக்கும் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால் பொது மக்கள் செயலகத்திற்கு வீணாக அலையத் தேவையில்லை எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (66)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 44 பிரமோதூத மார்கழி 26 (10-01-1991) வியாழன்

## தாலி என்று எண்ணிய திருடன் மஞ்சள் கயிற்றை அறுத்தான்!

கழுத்திலிருந்த மஞ்சள் கயிற்றை தாலிக்கொடி என்று நினைத்து அதை அறுத்த சம்பவம் நேற்று அதிகாலை நல்லூரில் இடம்பெற்றது. நேற்று அதிகாலை 5 மணியளவில் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் வீதியால் வந்த பெண் மணியின் கழுத்தில் இருந்த மஞ்சல் கயிற்றை இருட்டு நேரமானதால் தாலி என்று எண்ணிய திருடன் ஒருவன் அதை அறுத்துக்கொண்டு ஓடினான். இச் சம்பவத்தில் இப் பெண்ணின் கழுத்தில் பலமான காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

# அரசியல் தீர்வுகாண அரிய சந்தர்ப்பம்!

## அரசு நழுவவிடாது எனப் புலிகள் நம்பிக்கை

"ஸ்ரீ லங்கா ஆயுதப்படைகளே போர் நிறுத்தத்தை தொடர்ச்சியாகமீறிவருவதுடன் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளன. கடந்த எட்டு நாட்களில் மூப்பத்தொன்பது மீறல் சம்பவங்கள் நடந்துள்ளன. ஒரு புறம் போர் நிறுத்தத்தை மீறிக்கொண்டு மறு புறம் பழியை எமது இயக்கத்தின் மீது சுமத்துகிறது தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் ஏற்படுத்த அரசு உண்மையில் விரும்பினால் இவ்வாறு எல்லாம் நடந்து கொள்ளாது."

இவ்வாறு விடுதலைப் புலி புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஒரு தலைப்பட்சமான முறையில் நாம் பிரகடனம் செய்த போர் நிறுத்தத்தால் செய்வதறியாது தடுமாறிய அரசு, மூன்று நாட்கள் வரை ஆலோசனை செய்தபின்பே ஒரு பதிலறிக்கையை வெளியிட்டது.

தான் விதித்த ஏழு நாள் தாக்குதல் நிறுத்தத்துக்கு ஒரு தலைப்பட்சமான பல நிபந்தனைகளையும் அறிவித்தது.

ஆயுதம் தரித்தோர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் உரிமை, தேடுதல் வேட்டை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் லொறிகள் செல்ல கையூட்டுக்கள் வழங்க வேண்டும்!

வவுனியாவில் உள்ள தடைமுகாமில் கையூட்டுக்கள் வழங்கும் லொறிகளுக்கே கொழும்பு செல்ல அனுமதி வழங்கப்படுகிறதாக லொறிச் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

பூநகரி பலநோ. கூ. சங்க லொறிகள் இவ்வாறு செய்யாத காரணத்தால் கொழும்பு செல்லாது திரும்பியுள்ளன.

இதனால் நேரத்துக்கு கொழும்பு சென்று பொருட்களை எடுத்து வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 35)

## மொசாட் விவகாரம் குறித்து இன்று கொழும்பில் விசாரணை

இலங்கை விவகாரங்களில் இஸ்ரேலிய உளவுப் பிரிவான 'மொசாட்டின்'' நடவடிக்கைகள் பற்றிய விசாரணை நடாத்தவென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் இப் பகிரங்க விசாரணைக்கு பொதுமக்களும் அனுமதிக்கப்படுவர்.

## வட பகுதி பொலிஸ்காரரை தெற்கில் ஏற்க மறுப்பாம்

வடபகுதி தமிழ் பொலிஸ்காரர்களில் எழுபது சதவீதமானோர் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற தமது விண்ணப்பங்களை கொழும்பில் உள்ள வடபிராந்தியப்பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதே சமயம் இவர்களை தெற்கில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்ப எடுத்த முயற்சியும் கைகூடவில்லை.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரப்பகுதி அலுவலகங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன

வெளிமாவட்ட மின் அத்தியட்சகர் பகுதிகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

இதன்படி தற்காலிகமாக இயங்கிய முல்லைத்தீவு மாவட்ட மின் அத்தியட்சகர் அலுவலகம் மீண்டும் மாங்குளத்தில் இயங்குவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாங்குளத்தில் இயங்கிய முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி

— 4 ஆம் பக்கம் பார்க்க

### கொழும்பு நகர்ப்பகுதி

## தனியார் பஸ் சேவை நிறுத்தம் பொலிஸ் கைதின் எதிரொலி

கொழும்பு நகரின் பிரதான வீதிகளில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்சேவைகள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளன. தனியார் பஸ் உரிமையாளர்கள் சிலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்தே இவ் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

கைது செய்யப்பட்டவர்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கட்டுவனில் துப்பாக்கித் தாக்கு

நேற்று நண்பகல் 1 மணியளவில் கட்டுவன் -மினிமுகாமிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி 9 தடவைகள் துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ந்து தீர்க்கப்பட்டன. (ப-10)

## வாணம் விழுந்து கார் எரிந்தது

புத்தாண்டுப் பட்டாசு விழுந்து வெடித்தபோது கார் தீப்பற்றி எரிந்தது

கொழும்பு ஜாவத்தை வீதியில்இச்சம்பவம்நடந்துள்ளது.

திங்கள் நள்ளிரவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ''வோக்ஸ் வகன்'' காரினுள் புத்தாண்டுக்கு கொழுத்திய பட்டாசு வீழ்ந்து வெடித்ததினால் கார் முற்றாக எரிந்து நாசமாகியது. (11)

## வன்னியில் இதுவரை அமைதி

புத்தாண்டிற்குபிறகுவவுனியா மாவட்டத்தில் பூரண அமைதி நிலவுகின்றது.

விமான, ஹெலி, பொம்பர் ஓட்டத்தினை அதிகமாக காணவில்லை.

வன்னி மாவட்டமான மன்னார், முல்லைத்தீவிலும் அமைதி ஏற்பட்டுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறின. (11)

### கொழும்பு தலைமையகம்

## செஞ்சிலுவை கடமைகளில் யுத்த நிறுத்த கண்காணிப்பு இல்லை

இலங்கையில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகம் மறுத்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க கடமைகளில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு என்ற விடயம் அடங்கவில்லை எனவும், இது ஒரு சிக்கலான பொறுப்பு எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கொழும்புத் தலைமையகப் பேச்சாளர் காற்றலின் கூறியுள்ளார்.

### 1990 ஆம் ஆண்டின்

## 3ஆம் தவணைப் பரீட்சை இம்மாதம் 22 இல்

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் 1990 ஆம் ஆண்டின் கல்வி ஆண்டுக்கான கல்வித் தவணைகளின் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் ஜனவரி 22 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டு பெப்ரவரி ஆறாம் திகதிக்கு முன் வகுப்பேற்றல் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்படவுள்ளன இதன்படி பெப்ரவரி 6 ஆம் திகதி புதிய ஆண்டின் முதலாம் தவணை தொடங்கும்.

மேற்படி பரீட்சைக்கு தமது சொந்தப் பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்ததன் காரணமாக வேறு பாட

— 4 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை சீமெந்து ஆலை அதிகாரிகளுக்கு அழைப்பு

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத் தாபனத்தைச்சேர்ந்த உயரதிகாரிகள் 9 பேரை உடனடியாக கொழும்பிற்கு வருமாறு தலைமையகம் நேற்று அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

சீமெந்துத் தொழிற்சாலையை இயங்க வைப்பது தொடர்பாகவும், இதனால் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள்பற்றியும்ஆராய்வதற்காகவுமே இவர்கள் அவசரமாக அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (74

# யாழ் மாவட்டப் பாடசாலைகளில் புதிய அதிபர்கள் நியமனம்

(நேற்றைய தொடர்ச்சி)

முதலாம்தர அதிபர்கள்:- எஸ். தார்சிசியஸ் அதிபர், சென் மேரிஸ் வித், எம். திருஞானசம்பந்தபிள்ளை அதிபர், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, திருமதி. பி.எவ். சின்னத்துரை அதிபர், யா/புனித யோசேப்பு மகாவித்தியாலயம், திருமதி எஸ். காங்கேயன் அதிபர், யா/நல்லூர் இந்து த. க. பா., சண்முகநாதன் அதிபர், யா/கொட்டடி நமசிவாயம் வித்,, திருமதி. ஜெயராஜா அதிபர். யா/கொக்குவில் ஞான பண்டித வித்., கே. கலாகரன் அதிபர், யா/மண்டைதீவு மகாவித்தியாலயம், க இராசதுரை அதிபர், யா/நடேஸ்வராக் கல்லூரி காங்கேயன் துறை, எஸ். சண்முகலிங்கம் அதிபர், சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்., கே. சந்திரபாலன் அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச வித்., எஸ். செல்வராசா அதிபர் யா/அராலி இந்துக்கல்லூரி, எஸ். ஜெயநாயகம் பிரதி அதிபர், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி. (தொடரும்)

## வீதிகள் படுமோசம்!

பூநகரிப் பகுதியிலுள்ள பிரதான வீதிகள் மோசமாகச் சேதமடைந்துள்ளமையால் யாழ் மாவட்டத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதில் லொறிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

குறிப்பாக பூநகரி—சங்குப்பிட்டி வீதியில பல இடங்களில் இரண்டு தொடக்கம் மூன்றடிவரை ஆழமான குழிகள் இருப்பதனால் பல சந்தர்ப்பங்களில் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி குடைசாய்ந்துள்ளன.

## பூநகரிச்செய்திகள்

### தளபாடங்கள் சேதம்

பூநகரி பரமன்கிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக் கதவு உடைக்கப்பட்டதுடன் அங்கிருந்த தளபாடங்கள் சிலரினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

மிகவும் பின்தங்கிய இக்கிராமத்தில் பல அனர்த்தங்களுக்கும் மத்தியில் இப்பாடசாலை இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## படகுச் சேவை போதாது

கேரதீவு—சங்குப்பிட்டிக் கிடையிலான கடற்போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவள்ள சேவைகள் போதாமையினால் பிரயாணிகள் பல கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6 மணியில் இருந்து பகல் 12 மணிவரை மூவாயிரத்திற்கும் அதிகமான சைக்கிள் பயணிகள் கேரதீவு துறையில் இருந்து ஐயனார் கோவில் வரை அக்கரை சேர்வதற்காகக்காத்து நின்றனர். இவர்களில் குழந்தைகளும் பெண்களும் அடங்குவர். (6

# 2-ம் வருட நினைவஞ்சலி



## திருவாளர் சின்னத்துரை குணரட்ணம்

(பிரபல வர்த்தகர், மரக்காலை உரிமையாளர், வாகன முகவர், அரசாங்க ஒப்பந்தகாரர்)

அன்னையின் மடியில் : 1956 . 01. 27
ஆண்டவன் அடியில் : 1988 . 12. 01

# 1-ம் வருட நினைவஞ்சலி



## செல்வி சின்னத்துரை சித்திரவதனி

(வெளிவாரி கலைப்பட்டதாரி மாணவி)

அன்னையின் மடியில் : 1966. 11. 23
ஆண்டவன் அடியில் : 1989. 12. 22

திதி: 1991. 01. 10

## கண்ணீர்ப்பூக்கள்

பச்சிலைப் பள்ளியம்தனில் சூழ்ந்த விஸ்ணுமகாலில்
செந்தமிழ்ச் செல்வர் சின்னத்துரையும்
மங்கை நல்லாள் நாகம்மாவும் பெற்ற
நற்றவப் பயனாய்த் தோன்றிய செல்வங்களே
சான்றோர் போற்றும் குணக்குன்றே
பளைதனில் பேரும் புகழோடும் வாழ்ந்தவரே
அஞ்சா நெஞ்சும் ஆண்மையும் உடையவரே
அன்பும் பண்பும் அறனும் கொண்டாய்
ஏழைகள் தோழா நடுநிலையாளா
தனக்கென வாழாதென்றும் பிறர்க்கிதமாய்
வாழ்ந்தவரே

அன்பருக்குதவும் அண்ணலே அருமருந்தே
பாதகர் செய்த சதிச்செயலால்
உன்னுயிர் மாய்ந்ததுவே நொடிப்பொழுதில்
மாய்ந்த துயர் மாறு முன்னே
வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல்
நம்புதற்கு முடியவில்லை நாவுரைக்கத்
தோணுதில்லை
சிரிப்பாள் சிந்திப்பாள் முத்தான
உன்தங்கை சித்திராவும் உனை நினைத்து
நாலு நாட் காய்ச்சல் தனிலே சித்திரப் பாவையானாள்

அன்புத் தெய்வங்களே! உங்கள் இருவரையும் பிரிந்து துன்ப இருளில் தவிக்கின்றோம். காலம் பல கடந்தாலும் உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''விஸ்ணுமகால்''
கண்டி வீதி,
பளை.

உங்களது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

01039

# யாழ் வைத்தியசாலையில் ''இன்சுலின்'' இல்லை
# நீரிழிவு நோயாளர் கடும் பாதிப்பு!

யாழ் போதனா வைத்திய சாலையில் நீரிழிவு நோய்க்கு பயன்படுத்தப்படும் அதி முக்கிய ஊசி மருந்தான ''இன்சுலின்'' இல்லாமையால் இந்நோயாளிகள் பல விபரீதம் அடைய வேண்டியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் புஸ்பா சண்முகம் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தார்.

மேற்படி ஊசி மருந்து நீண்டகாலமாக ஆஸ்பத்திரிக்கு வந்து கிடைக்காமையால் நீரிழிவு நோயால் புண்கள் ஏற்பட்டுள்ள நோயாளிகளுக்கு அவர்களின் பாதிப்புக்குள்ளான உறுப்புக்கள் அகற்றப்படவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட மருந்து நோயாளிகளின் நோய்த்தன்மைக்கு ஏற்ப தொடர்ந்து போடப்படுவது அத்தியவாசியம் என மேலும் அவர் சுட்டிக்காட்டினார்.

# 'தவிலாக' இருப்பேன் என்கிறார் தமிழக முதல்வர் கலைஞர்!

மிகவிரைவில் தமிழக அரசு கவிழ்க்கப்பட்டுவிடும் என்று முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தீர்மானித்துவிட்டார் போலிருக்கிறது என்று தமிழகத்தின் பிரபல சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சென்னை ரஸிக ரஞ்சன சபா அரங்கில் நடைபெற்ற முத்தமிழ்ப்பேரவையின் இயல், இசை, நாடகவிழாவில் அவர் நிகழ்த்திய உரையை இச் செய்தி இதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளது. ''செங்கோல் என் கையிலிருந்து பறிக்கப்பட்டாலும் எழுதுகோலை யாராலும் என் இறுதிக்காலம் வரையில் பறிக்க இயலாது'' என்று முதல்வர் சொன்னபோது அவர் குரல்தழுதழுத்ததாம்.

''குழந்தையை அடித்தால் அது அழும்... ஒரு எதிரியை அடித்தால் குமுறுவான், கொந்தளிப்பான், திருப்பி அடிப்பான், தவில் இருக்கிறதே அதை அடித்தால் 'அடிக்கிறாயே' என்று அழுவதுமில்லை, கோபித்துக் கொள்வதுமில்லை. அது கோபத்தை நாதமாக வெளிப்படுத்துகிறது. அதைப்போல், தீங்கு செய்யப்படுகிற நேரத்தில் கூட அந்தத் தீமையையும் நன்மையாக ஆக்கி, மற்றவர்களுக்குக் கீதமாகப் பொழிகின்ற ஒன்றாகத் தவில் விளங்குகிறதே என்று நாம் எண்ணிக் கொண்டால் நாமும் ஏன் அந்தத் தவில் போல் இருக்கக்கூடாது என்கிற உணர்வு நமக்கெல்லாம் எழும்'' என்று கலைஞர் தன் உரையில் மேலும் கூறினார்.

## கோவளம் கரையில் ஆணின் சடலம்

காரைநகர் கோவளம் வெளிச்சவீட்டு கடற்கரை ஓரத்தில் முப்பது வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

பச்சை நிற உள்ளங்கி அணியப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட இச்சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (ப-31)

## விவசாயக் கல்லூரிக்கு பலத்த சேதம்

கடந்த அசம்பாவித காலத்தில் வவுனியா விவசாய கல்லூரிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

சேதவிபரம் இன்னமும் மதிப்பிடப்படவில்லை என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறின.

வவுனியா - யாழ்வீதி தாண்டிக்குளத்திற்கு அருகாமையில் இந்த கல்லூரி உள்ளது குறிப்பிடத்தக்கது. (11)

## வாழ்க்கைச் செலவு புள்ளி 1094. 9

1990 - டிசம்பர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1094 9 என குடிசன மதிப்பு புள்ளி விபரப் பகுதியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுய வேலைவாய்ப்பு கருத்தரங்கு

தேவரையாளி இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவில் கடந்த காலங்களில் பயிற்சி பெற்று வெளியேறியோருக்கான சுயவேலை வாய்ப்பு தொடர்பான கருத்தரங்கு 12 ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2 கோடியையெட்ட முன்-வருடாந்தம் லட்சம் பேர் சிறகடிப்பு

வருடாந்தம் இரண்டு லட்சம் இலங்கையர்கள் தொழில் நிமித்தம் நாட்டை விட்டு வெளியேறி வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடத்திய மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரிய வந்துள்ளது.

இவ்விதம் வெளியேறுவோரில் அரைவாசிப்பேர் வேலைக்கு ஆட்சேர்ப்பு முகவர்கள் மூலமும், இதர சட்டபூர்வமான வழிகளிலுமாக வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

கடந்த ஆண்டில் மாத்திரம் வேலைவாய்ப்பின் நிமித்தம் ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமையும் இந்த மதிப்பீட்டிலிருந்து அறியப்பட்டுள்ளது

இலங்கையின் சனத்தொகை இன்னும் முழுமையாக இரண்டு கோடியை எட்டவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

# வன்னியில் மலேரியா பரவுகிறது

முழங்காவில், பல்லவராயன் கட்டு, வன்னேரிக்குளம், அக்கராயன் குளம் போன்ற வன்னி மாவட்டத்தின் பல பின்தங்கிய பகுதிகளில் தற்போது மலேரியாக் காய்ச்சல் வெகு வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வைத்திய வசதியும் குறைவான படியினால் இப்பகுதி மக்கள் இந்நோயைக் குணப்படுத்தப் பெரிதும் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்து கடமைக்காகவும், வியாபாரத்திற்காகவும், இப்பகுதிகளுக்குச் செல்வோரையும் இக்காய்ச்சல் சுலபமாகப் பற்றிக்கொள்வதாகவும் கூறப்படுகிறது. (ப-32)

# நித்திரையில் இருந்த கணவன் மனைவியினால் வெட்டிக் கொலை!

மதுபோதையில் வந்து உறங்கிக் கொண்டிருந்த கணவனின் கழுத்தை அவரது மனைவி கத்தியால் வெட்டித் துண்டாடிய சம்பவம் ஒன்று ஹொரணைப் பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான சோமபால (வயது 38) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

இவர் குடித்துவிட்டு வந்து வீட்டில் எப்போதும் சண்டை போடுவார் என்றும் இவரிடமிருந்து தப்புவதற்கு நித்திரையிலிருக்கும் போதே இவரது கழுத்தைத் துண்டாடி கொலை செய்தே தீருவேன் என்று அம்மா பலமுறை தங்களிடம் கூறியுள்ளதாக இவரது மகளான சித்தா ஜயந்தி சாட்சியமளிக்கையில் கூறினார்.

சம்பவதினமிரவு தந்தைக்கு தாய் சோமாவதி இரண்டு கவளம் சோற்றை ஊட்டிவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (74)

# ஆணைக்குழு இங்கு வந்தால் அரசுக்கு அது ஆபத்தாம்

ஐக்கியநாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இலங்கை விஜயத்தை அரசு இழுத்தடித்து வருவதாகச் சுதந்திரக்கட்சி எம்.பி. மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இன்னொரு தொகுதி வெளிநாட்டு நிதியுதவி அடுத்த சில மாதங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்க விருப்பதாகவும், இக்குழு அதற்குள் இங்கு வந்தால் கிடைக்கவிருக்கும் உதவிகள் பாதிக்கப்படலாம் என அரசு அஞ்சுவதாகவும் இதனாலேயே அரசு இவ்வாறு நடந்து கொள்வதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

காணாமல் போனவர்கள் பற்றி ஆராயும் ஏழு பேர் கொண்ட இக்குழுவுக்கு யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த ஜவன் ரொஸெவ்ஸ்கி தலைமை தாங்குகிறார்.

# விஞ்ஞானிகள் ஒன்றியத்தை வடபகுதியில் உருவாக்க முயற்சி

வட பகுதியில் விஞ்ஞானிகளின் ஒன்றியமொன்றை உருவாக்குவதற்கான முயற்சியொன்று யாழ் பல்கலைக் கழக மட்டத்தில் தற்பொழுது எடுக்கப்பட்டு வருகின்றது.

விஞ்ஞான பூர்வமான கண்டுபிடிப்புக்களையும் அவற்றின் பிரயோகங்களையும் பரவச் செய்யும் ஓர் பொதுமன்றமாக இவ் ஒன்றியம் செயற்படும் என அறிவிக்கப்படுகின்றது.

கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல், ஆய்வுக்கண்டுபிடிப்புக்களை வெளியிடுதல் ஆகிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் இவ் ஒன்றியத்தினை உருவாக்குவதற்கான முதல் கூட்டமொன்று 11 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை அரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளதாக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (74)

# பிரதி செய்யும் படிவங்கள் இல்லை!
## பிறப்புப்பதிவு ஏற்பது நிறுத்தம்

பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவகத்தில் பிறப்புச் சான்றுப்பத்திரங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல்வரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றுப்பத்திரங்களைப் பிரதி செய்யும் படிவங்கள் இன்மையால் இவ் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளமுடியாதென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரதி செய்யும் படிவங்கள் போதியளவு இன்மையால் ஆயிரக்கணக்கில் பிறப்பு சான்றுப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் தேங்கியுள்ளன 50

## மந்திகையில் சைக்கிள் களவு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை சுற்றாடலில் சைக்கிள் களவு அதிகரித்துள்ளது வைத்தியசாலைக்கு வெளியே உள்ள கடைகளுக்கு முன்பாக நிறுத்தப்படும் சைக்கிள் வண்டிகளே அதிகமாக களவு போவதாக தெரிவிக்கப்படுகிறது. (50)

# கொழும்பில் நீர் வழங்கலுக்கு ஜனவரி முதல் கட்டணம் அதிகரிப்பு

கொழும்பில் நீர் வழங்கலுக்கான கட்டணங்கள் ஜனவரி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நீர்விநியோக சபை அறிவித்துள்ளது.

இதுவரை, முதல் 10,000 லீற்றர் நீர் இலவசமாகவே வழங்கப்பட்டுவந்தது.

ஆனால் இனிமேல் முதல் 10 000 லீற்றர் நீருக்கு ஒரு ரூபாவும், இரண்டாவது பத்தாயிரம் லீற்றர் நீருக்கு ஒரு ரூபா ஐம்பது சதமும், மூன்றாவது பத்தாயிரம் லீற்றர் நீருக்கு நான்கு ரூபா ஐம்பது சதமும், நான்காவது பத்தாயிரம் லீற்றர் நீருக்கு எட்டு ரூபாவும் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

50, 000 லீற்றர் நீருக்குப் பத்தொன்பது ரூபா ஐம்பது சதமும், மாணி பூட்டப்படாதவிடத்து 100 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.


## சிறு விளம்பரம்

### தேவை

ஊதுபத்தி உருட்டத் தெரிந்தவர்களுக்கு உடன் வேலை வாய்ப்பு 1000/-வுக்கு மேல் சம்பாதிக்கலாம் இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை. கோல்ட்ஸ் இன்டஸ்றி, சந்தைக்கு முன்பாக உரும்பிராய். 01055

### புத்தகம்

வர்த்தகமும் நிதியும் (1) (உயர்தர வகுப்புக்குரியது) உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்துதல் A/L வர்த்தக மாணவர்களின் உதவி நூல். தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன் B. Com Hons M B. A (Delhi) விலை ரூபா 48/- வெளியீடு - விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 01063

## நீங்களும் பட்டதாரியாகலாம்

A/Lல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் வெளிவாரியாகப் பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு பேராதனைப் பல்கலைக் கழகம் அனுமதி கோரியுளளது.

இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15-1-91

விரிவுரை ஆரம்பம்; 13–1–91

விபரங்கள் நேரில்

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி — யாழ்ப்பாணம்.

01081

# எழமறுக்கும் கிருதயுகம் - 4

நேற்றைய தொடர்ச்சி...

## மார்க்ஸீய நிலைப்பாடு

மார்க்ஸீயத்தின் முக்கியத்துவம் அதன் கொள்கையமைப்பில் மாத்திரமல்ல, அது பிழையற நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதும் இப்பொழுது புலனாகியுள்ளது. அப்படி நடந்தால்தான் மார்க்ஸ் விரும்பியது போல உலகைமாற்றியமைக்கமுடியும் மார்க்ஸிய அரசியலிடத்து அந்த ஆற்றல் இல்லையெனில், பத்தோடு பதினொன்றாக, இதுவும் ஒரு வியாக்கியானக் கொள்கையாகவிருக்க வேண்டியதுதான்.

மறுசீரமைப்புக் கொள்கை எமக்கு இன்னொரு ஞானோதயத்தை ஏற்படுத்துவது அவசியமெனக் கருதுகின்றேன மூன்றாவது உலக நாடுகளில், குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சோஷலிஸ இயக்கம் ஏன் அரசியல் ரீதியான வெற்றியை ஈட்டவில்லை என்பது பற்றி நாம் 'மறுபரிசீலனை' செய்ய வேண்டுவது மிக அவசியம் எனக் கருதுகின்றேன்,

அந்த மறுபரிசீலனை இருமுகப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

1. அணுகுமுறையில் ஏற்பட்ட பிரச்சினைகள்
   இதுபெரும்பாலும் மார்க்ஸீயவழி நாம் இச்சமூகங்கள் பற்றிப் பெற்றுக் கொண்ட அறிவு பற்றியதாகஇருக்கும்.
2. மார்க்ஸிய நடைமுறைகளுக்கென நாம் ஏற்படுத்திக் கொண்ட நிறுவன அமைப்பு.

முதலாவது அமிசத்தினைச் சற்று விரிவாகவே நோக்குவது அவசியமாகிறது. மேற்கத்திய மார்க்ஸிஸம் (Westen Marxism) எனப் பெறி அண்டர்சன் குறிப்பிடுகின்ற மார்க்ஸிய வளர்ச்சியின்படியாகப் பெற்ற அறிமுறைகளைத் தளமாகக் கொண்டே கீழைத்தேய சமுதாயத்தையும் ஆரம்பகாலப் பொதுவுடமைவாதிகள் பார்த்துள்ளனர். அப்படிப் பார்த்ததன் காரணமாக இச் சமூகங்களிற் காணப்படும் சுரண்டல் முறைமைகள், இச்சமூகங்களில் மதம் வகிக்கும் பங்கு ஆகியன பற்றிய சரியான தெளிவு பெறப்படவில்லையென்பது புலனாகின்றது

அத்துடன் தம்மையறியாமலே இவர்கள் எத்தகைய தவறான நோக்குகளைப் பெற்றுக் கொண்டனர் என்பது பற்றியும் ஆராய்தல் வேண்டும் (இந்தியப் பொதுவுடமை வட்டாரங்களில் 'பேராசான்' என்ற அடை மாக்கஸ் பற்றி மாத்திரமே பயன்படுத்தப்படலாம் மற்றையோரை அப்பெயர் கொண்டு சுட்டினால் அது மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதப்படும்: இங்கு மார்க்ஸை ஒரு ''ரிஷி'' யாகக் கொள்ளும் தன்மையை அவதானிக்கலாம்)

ஒக்ரோபர் புரட்சியின் பின்னர் 73 வருடங்களுக்குப் பின்னர் சோவியத் ஒன்றியத்தில் மக்களின் இனக்குழும(Ethnic identity) த் தனித்துவம் பேசப்படும் பொழுது இங்கு மார்க்ஸீயத்தின் பேரினால் அத்தனித்துவம் நிராகரிக்கப்பட்டமை எத்துணைச் சிறுபிள்ளைத்தனம் என்பதை நோக்கல்வேண்டும். மார்க்ஸீயம் இனத்தனித்துவ உணர்வுக்கு இடமளிப்பதில்லை என்று நினைப்பவர்களும் உண்டு. அது ஒரு இரட்டைச் சோகமாகும். நிறுவன ரீதியாகவும் பொதுவுடமைப் பரவல் கட்சிகளின் அமைப்புத் தன்மைகளால் பாதிக்கப்பட்டதென்பதை மறந்துவிடுதல் கூடாது.

பெறெஸ்ற்றோய்க்கா தந்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி இச்சமூகங்களில் மார்க்ஸீயம் வெற்றியுடன் காலூன்ற முடியாது போனமைக்கான காரணங்கள ஆராயப்பெற வேண்டும்.

## கிருதயுகம் கிளம்புமா?

இறுதியில் ஒரு வினா.

பெறெஸ்ற்றோயிக்காவின் பின்னராவது பாரதி கூறிய ''கிருதயுகம்'' கிளம்புமா?

சமத்துவமும், சுரண்டலுமற்ற ஒரு அமைப்பே கிருதயுகத்தைத் தரவல்லது என்ற கருத்து இதனுள் தொக்கு நிற்பது திருப்தியைத் தருகின்றது.

மனித வரலாறு இரண்டொரு தலைமுறையுடன் முடிந்து விடுவதில்லையே! (முற்றும்)

## வட பகுதி...

தமிழ்ப் பொலிஸ்காரர் தமக்கு வேண்டாம்என தென் பகுதி பொலிஸ் அதிகாரிகள் தெரிவிப்பதாகவும் தெரிய வருகிறது. (33)

## மின்சாரப்பகுதி...

மாவட்ட மின் பொறியியற் பகுதி கிளிநொச்சியில் இயங்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. (ப-11)


## இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலைய அறிவித்தல்

### உயர் தொழில் ஆங்கில கற்கை நெறி

### இறுதிப் பரீட்சை 1990.

(Certificate in Professional English Course)
(Final Exam 1990)

மேற்குறிப்பிட்ட பரீட்சை 1991 ஜனவரி மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் யாழ் பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளது. இக் கற்கை நெறி கற்றுத் தோற்ற உள்ள மாணவர்கள், விபரங்களுக்கும் அனுமதி அட்டை பெறுவதற்கும் தொடர்பு கொள்ளவும்.

மு. தில்லைநாதன்,
உதவிப் பணிப்பாளர்,
திறந்த பல்கலைக்கழகம், யாழ் பிராந்திய நிலையம்.
01082


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி... கல்வியங்காடுடச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 10-01-1991இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

பிரதமர் சந்திரசேகர் சொல்கிறார்

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா நடவடிக்கை இல்லை

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா உடனடியாக புதுமுயற்சி எதனையும் மேற்கொள்ள மாட்டாது என்று பிரதமர் திரு. சந்திரசேகர் சூசகமாகத்தெரிவித்துள்ளார்

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா எந்தப்புதுமுயற்சியையும் மேற் கொள்வதில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கும் என்றும் இலங்கையில் தற்போது உள்ள போர் ஓய்வு நிலையில் இந்திய அரசு அவசரப்பட்டு எந்த நடவடிக்கையிலும் இறங்காது என்றும் பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது பிரதமர் சந்திரசேகர் கூறினார்.

## கொள்ளை

கல்முனை ரெஜிஸ்டார் வீதியில் ஆறு வீடுகளிலும், பாண்டிருப்பில் இரு வீடுகளிலும் புதுவருடத்தன்று நள்ளிரவு கொள்ளையடிக்கப்பட்டுளளது.

87 ஆயிரம் ரூபா பணமும் நகைகளுமே இவ்வாறு அபகரிக்கப்படடுள்ளன. (74)

## அரசியல்..

யைத் தொடரும் அதிகாரம் ஆகியவற்றை வலியுறுத்தியது. உண்மையில் போர் நிறுத்தத்தை மீறும் வகையில் அரச படைகளுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன

படையினரும்பொறுப்பற்ற முறையில் போர் நிறுத்தத்தைப் மீறி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு உண்மையில சமாதானத்தை விரும்பினால் காலவரையறையற்ற முழுமையான போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்ய வேண்டும்.

சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு அரசு விதித்துள்ள முன் நிபந்தனைகளை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. நிபந்தனையற்ற பேச்சுக்களையே நாம் விரும்புகின்றோம்.

பேச்சுக்கள் வாயிலாக அரசியல் தீர்வு ஒன்றுக்கு வழிகோலும் இந்த அரிய சந்தர்ப்பத்தை அரசு நழுவ விடாது என்று நாம் நம்புகிறோம். (71)

# பல்கலைக் கழகத்துக்குரிய நிதி திரும்பிச் செல்வதில்லை

திறைசேரியூடாக யாழ் பல்கலைக் கழகத்திற்கு வரும் எந்த நிதியும் திரும்பிச் செல்வதில்லையெனப் பல்கலைக் கழகப் பதிவாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு வருடத்திற்கும் என ஒதுக்கப்படும் நிதியின் ஒரு பகுதியையே பல்கலைக் கழகம் கட்டிடச் செலவிற்கும் ஏனைய செலவிற்கும் செலவழித்தாலும் மிகுதிப் பணம் திரும்பிச் செல்வதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிகுதிப் பணம் அடுத்த வருடத்தில் ஒதுக்கப்படும் நிதியோடு சேர்த்து வழங்கப்படுமெனவும் அவர் மேலும் கூறினார். (ப-11)

# முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 'நிசான் பிக்கப்' கிடைத்தது

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நடமாடும் சுகாதார சேவையின் முல்லைத்தீவு மாவட்டப் பிரிவுக்கு ஜப்பான் செஞ்பிறைச் சங்கம் ''நிசான் பிக்கப்'' வாகனம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

எனினும் இவ்வளவு நாளும் வாகன வசதி இன்மையால் அவர்களின் சேவையை முழுமையாக வழங்க முடியாமல் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (74

## 3 ஆம் தவணை

சாலைகளில் கல்விகற்கும் மாணவர்களும் இடம் பெயர்ந்து கற்கும் அவ்வப் பாடசாலைகளிலேயே பரீட்சை எழுதி அதன்படி வகுப்பேற்றப்பட வேண்டுமென்றும், வகுப்பேற்றப் பட்ட மாணவர்களது புள்ளிகள் சம்பந்தப்பட்ட மாணவரின் சொந்தப் பாடசாலை அதிபர்களுக்கு மாணவருடாக தற்போதையபாடசாலை அதிபர் அனுப்பிவைக்க வேண்டுமெனவும் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (32)

## தனியார்...

களில் சிலர் நேற்றுப் பொலிஸாரினால் விடுவிக்கப்பட்டதைத்தொடர்ந்து ஹோமகம, மஹரகம வழிதடல்கள் மீண்டும் சேவையாற்ற ஆரம்பித்துள்ள போதிலும் ஏனைய சேவைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ் பல்கலைக்கழகம், இலங்கை

## மகாபொல கொடுப்பனவு - 89/90

### 1-ம் 2-ம் தவணைப் பணங்கள்

### நவம்பர் டிசெம்பர் 90

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் கீழ் வரும் அட்டவணைப்படி செய்யப்பட்டுள்ளன.

1 கலைப்பீடம்

1-ம் வருட மாணவர்கள்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
2-ம் 3 ம் 4-ம் வருட மாணவர்கள்
(பிந்திப் பதிவு செய்தவர்கள்)
கலைப் பிரிவு
வர்த்தகப் பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு

09-01-91 — 9.00 — 12.00
15 01-91 — 1.30 — 02 30
16-01-91 — 9.00 — 12.00

2 விஞ்ஞானபீடம் \ மருத்துவபீடம்

1-ம் வருட மாணவர்கள்
பௌதீக விஞ்ஞானம்
உயிரியல் விஞ்ஞானம்
மருத்துவபீடம்
2-ம் 3-ம் 4-ம் வருட விஞ்ஞானபீட மாணவர்கள்
(பிந்திப்பதிவு செய்தவர்கள்)
பௌதீக விஞ்ஞானம்
உயிரியல் விஞ்ஞானம்

09-01-91 — 1. 30 — 2. 30
15-01-91 — 9. 00 — 12. 00
16-01-01 — 1. 30 — 2 30

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை :

1 பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2 மாணவர் பதிவுப் புத்தகம்.
3 ரூ. 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

01085